10. 1975-76ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது கல்வி மானியத்தின மீது விவாதம் தொடரும். பேசுவதற்கு 16 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் 7 முதல் 8 நிமிடங்களுக்குள் பேசி முடித்தால்தான், 12½ மணிக்கு அமைச்சர் பேச்சைத் துவங்க வாய்ப்பாக இருக்கும். நேற்றுப் பேசிய ஜேம்ஸ் அவர்கள் இன்றைக்குத் தொடர்ந்து 10 நிமிடங்கள் பேசுவார்.

*திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நமது மாநிலத்தில் இலவசக் கல்வித் திட்டம் அமுலில் இருந்து கொண்டிருக்கிறது. இது சமதர்மக் கொள்கைக்கு அடிப்படையாக—சமதர்மக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிற எந்த அரசும் கைக்கொள்ளவேண்டிய திட்டம். ஆனால், இன்றையதினம் தமிழ் நாடு அரசு அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தோம். உண்மையிலே இது விரும்பத்தக்கதல்ல. ஏனென்றால், இலவசக் கல்வித் திட்டம் வந்ததன் அடிப்படையில்தான் இன்றைக்கு ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அக இருளை அகற்றி அறிவொளி வீசப்படுகிறது. இந்த இலவசக் கல்வித் திட்டத்தைக் கைவிட்டால் ஏழைகள் கல்வி அறிவு பெற வாய்ப்பில்லாமல் போய்விடும். இன்றைக்கு இலவசக் கல்வித் திட்டத்தைக் கைவிட சில ஆதாரங்களைக் சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரிகிறது.

உதாரணமாக, இப்பொழுது பப்ளிக் எக்சாமினேஷனில் தேர்வில் 50 சத விகிதம் தகுதியின் அடிப்படையில் இடம் தந்து, அதாவது மெரிட் அடிப்படையில் இடம் தந்து, அவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று முடிவு வருகிறது. அந்த முதல் தகுதியில்லாத மற்ற 50 சதவிகிதத்தினர், இரண்டாந்தரம், மூன்றும் தரமாக உள்ளவரிடமிருந்து கட்டணம் வசூலிக்க வேண்டும். ஏற்கெனவே மெரிட்டில் சேர்க்கப்படுகின்ற மாணவர்களிடம் வசூலிக்காமலிருப்பதால் ஏற்படுகின்ற இழப்புக்களை, கடைசித் தரப்பிலுள்ள மாணவர்களைச் சேர்ப்பதால், அவர்களிடம் வசூலிக்கின்ற கட்டணத்தின் மூலம் காம்பன்சேட் செய்யலாம் என்று கருதுவதாகத் தெரிகிறது.

இந்தக் கொள்கையைக் கைக்கொண்டால் வசதி உள்ளவர்கள்தான் பயனடைவார்கள். காரணம், இப்போதெல்லாம் பணக்காரர்கள் குழந்தைகள்தான் பஸ்ட்கிளாஸ் வாங்குகின்றனர். மூன்றும் கிளாஸ் வாங்குகிற மாணவர்கள் நன்மை பெற முடியாது. வசதியுள்ள மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கின்ற நிலைமைதான் ஏற்பட்டுவிடும். வசதியில்லாத மாணவர்களுக்கு இலவசக்கல்வி பெற வாய்ப்பு இல்லாத கிடைக்காத என்ற அபாயகரமான நிலைமையை இந்த அரசுக்குச் ட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு விரும்பினால், வசதி உள்ளவர்களிடமிருந்து பல்வேறு வரிகள்மூலம்